# இலங்கையில் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பெண்கள் யுத்தத்தின் பின் விளைவுகளைக் கையாளுதல்

ICG யின் ஆசிய அறிக்கை எண் 289/ 27 ஜூலை, 2017.

**Asia Report N°289** | 27 July 2017

# நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கையில் ஆயுதத்துடன் முரண்பாடு முடிவுற்று எட்டு வருடங்கள் கடந்திருப்பினும் இத்தீவின் வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் பெண்கள் தொடர்ந்தும் போர்க்கால உரிமை மீறல் தொடர்பில் நியாயத்தையும், உண்மையையும் நாடிய வண்ணம் உள்ளனர். 2015ம் ஆண்டில் ஐ.நாடுகளின் மனித உரிமை கவுன்சிலுக்கு துணிகரமாக அரசு அளித்த வாக்குறுதிகள் - ஒரு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒரு விசேட நீதிமன்றம் அமைத்தல். காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தி இழப்பை ஈடு செய்தலுக்கான அலுவலகம் உள்ளடங்கலான -விடயங்கள் செயற்படுத்தப்பட முடியாது போயுள்ளது. அத்துடன் தாமதமின்றி நிறை வேற்றப்பட வேண்டியதாய் இருந்த முரண்பாடுகளினால் பாதிப்புற்ற சகலருக்கும் பொருளியல் ரீதியான சமூக உளவியல் ரீதயான தேவைகள் கூட இது வரையிலும் பூர்த்திசெய்யப்படாமல் உள்ளது. இவற்றால் ஏற்பட்டுள்ள கோபமும் ஏமாற்றுப்பட்டு விட்டோம் என்ற உணர்வும் பெண்களால் முன்னெடுக்கப்படும் புதிய ஆர்ப்பாட்ட அலைகளை ஏற்பத்தியுள்ளது, அதனால் தமிழ் குடிமக்களிற்கும், அரசுக்கும் இடையிலானதும் சமூகங்களிற்கு இடையிலானதுமான நல்லிணக்கம் ஏற்படக்கூடும் என்று இருந்த சிறிதளவு நம்பிக்கை தகர்ந்து மனக்குறைகள் மீண்டும் உருவாக வழி வகை செய்யக்கூடிய அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசு கடந்த காலத்தில் நடைபெற்றவற்றை எதிர்கொண்டு சமூகங்களிற்கிடையில் புரிந்துணர்வை எற்படுத்தி நிலையான ஒரு சமாதானதைக் கட்டியெழுப்ப அரசு முரண்பாட்டால் பாதிப்புற்ற பெண்களின் தேவைகளை நிறைவேற்ற உரிமைகளை வழங்க முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். இவற்றைச் செய்வதற்கு காணாமல் போனோர் தொடர்பான அலுவலகங்களைத் தாமதமின்றி நிர்மாணித்து அவர்களின் இழப்புகளை ஈடு செய்வதற்கான ஒழுங்குகளைத் துரிதமாக செய்வதன் மூலம் இதனை ஆரம்பிக்க முடியும்.

முரண்பாடுகள் நடந்து கொண்டிருக்கையில் வலுவுள்ள ஒரு இராணுவத்திற்கும் அதிகாரப் போக்கைக் கொண்ட ஒரு அரசிற்கும் யுத்தத்தால் சிதைந்து போன வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் பேசும் பெண்கள் உண்மையைக் கணிடறிவதற்கும் பொறுப்புக் கூறலிற்கும் குறிப்பாக வன்மித்து குடும்ப உறுப்பினர்கள் காணாமல் போகச்செய்தமை தொடர்பிலும் துணிந்து அழுத்தம் கொடுக்கக் கூடியதாக இருந்தது. யுத்தம் முடிவுற்ற பின் அவர்களின் பிரச்சாரம் நிலைமாறும் கால

நீதி தொடர்பிலான விடயங்களை உள்ளக, சர்வ தேச நிகழ்ச்சி நிரல்களுக்குள் சேர்த்துக் கொள்ளப்பண்ணக் கூடியதாயிற்று. இவையாவற்றிற்கும் மையமாக அதாவது உறுதியளித்தவர்களுக்கும் நிலைமாறும் காலத்திற்கான நீதி வழங்கப்படுவதற்கான வழிமுறைகளும் கற்பழித்தலும் பாலியல் வன்முறையும் தொடர்பிலான அவர்களது அனுபவங்களும், குடும்ப உறுப்பினர்கள் மரணம் அடைந்தமையும் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) பலாத்காரமாக ஆட்சேர்த்ததையும், கொலைகள் செய்தமையும், சமூகங்களும் அவர்களின் இருப்பிடங்களும் அழிந்தமையும், உள்ளன. யுத்தத்தின் பின் விளைவுகள் தொடர்ந்தும் கஸ்டங்களை குறிப்பாக முரண்பாட்டால் பாதிப்புற்ற பெண்களிற்கு ஏற்படுத்தி வருகின்றன. அவற்றுள் தமது காணாமல் போன உறவு பற்றிய தகவல் இன்மை, தங்களது காணிகளில் இருந்து இடம் பெயர்ந்தமை, பொருளாதார இழப்புகள் உள்ளமை, மன உழைச்சலால் உள்ளமை, எளிதில் பாலியல் வன்முறைக்குள்ளாகக் கூடிய நிலையில் இருந்தலும், சுரண்டலும், இராணுவ மயமாக்கப்பட்ட சுற்றாடலில் வாழ நேர்ந்தமை முதலியன அவர்கள் அனுபவிக்கும் கஸ்டங்களை வலுவாக்கின்றன.

குறித்த பெண்களின் தீவிர செயல்கள் அங்கு நடைபெறும். விடயங்களின் நிகழ்ச்சி நிரல்களில் மையமாக இருந்தும் நிலைமாறும் தறுவாயிலான நீதி தொடர்பிலான கொள்கைகளை வடிவமைப்பதில் அப் பெண்களிற்கு ஒரு சிறிய பாகமே வகிக்க இடம் கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தும் வழிமுறைகள் தொடர்பான ஆலோசனை வழங்குவதற்கு அறிவுறுத்தும் செயலணியின் அறிக்கையின் அரசு பெருமளவில் கவனத்தில் எடுக்காத நிலை உள்ளது. இச்செயலணி வாயிலாகப் பெண்களின் கருத்துக்களைப் பெற்று தயாரிக்கப்பட்டமையால் இவ்விடயம் தொடர்பில் அரசின் அர்ப்பணிப்பு வலுப்படுத்தப்படும்என எதிர்பார்க்கப்பட்டது. அப்படி இருந்தும் குறித்த அறிக்கையில் உள்ள விடயங்களிற்கு அரசு கவனம் செலுத்துவதை தவிர்த்துவிட்டது எனினும் இடைக்கிடையில் சாதகமான சமிக்ஞைகள் தென்பட்டுள்ளன. உதாரணமாக சிறிதளவிலான காணிகள் விடுவிப்பு, ஜனாதிபதிகாணாமல்போன குடும்பங்களை நேரில் சந்திப்பது முதலியனவற்றைக் கூறலாம். ஆனால் இவை அரசியல் தலைவர்களினதும், இராணுவம் சார்ந்த எதிர் மறையான சமிக்ஞைகளாலும் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. போர் ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணங்களிற்கு கவனம் செலுத்தி அவ்வாறான ஒரு நிலை மீண்டும் ஏற்படாது தவிர்ப்பதற்கு வழி செய்ய தயாரிக்கப்பட்ட ஒரு புதிய யாப்பு நிறைவேற்றப்படும் என்ற எதிர்பார்ப்பு தடுமாற்ற நிலையில் உள்ளது.

INTERNATIONAL CRISIS GROUP

வடக்கு. கிழக்கு உள்ள பெண்களை பரந்த அளவில் நேரில் கண்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். அச்சமயம். அரசினால் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் நியாயத்தினை எதிர்பார்க்கின்றனர். என்றும் LTTE யினால் இழைக்கப்பட்ட குற்றங்களிற்கு நியாயம் கோருவதில் ஏகோபித்த கருத்து இல்லை என்றும்தெளிவாகத் தெரிய வந்துள்ளது. ஆனால் அவர்களது அத்தியாவசியமான கோரிக்கை அவர்களது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்று அறிந்து கொள்வதே. இவ்வகையில் முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்று கண்டறிந்து நியாயம் வழங்குவதற்கான முயற்சி பரந்த அளவில் தங்களது பொருளாதார, சமூகவியல், பாதுகாப்புத் தொடர்பான விடயங்களை வழங்குவதில் ஒரு பகுதியாக அமைய வேண்டும் என்பதே.

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழ் பேசும் பெண்கள் தான் முரண்பாடுகளினாலும் அதன் பிறகும் ஏனைய குழுக்களை விட பாதிப்புற்றவர்களாக உள்ளார்கள் என்பது விவாதத்திற்கு உரிய விடயம் அல்ல. யுத்தத்தினால் விதவைகளாக்கப்பட்டவர்களும், காணாமல் போனவர்களின் மனைவிகளும் பத்தாயிரக் கணக்கிலானோர் இல்லங்களில் தலைமை தாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு அவர்களின் பாரம்பரிய குடும்ப வகிபாகங்களைத் துறந்து பிரதான வருமானம் தேடுபவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் தற்காலத்தில் பொதுத்துறைகளில் புகுந்து அரசியல் செயல்பாடுகளிலும், பொருளாதார செயற்பாடுகளிலும், சமூக செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.இவர்கள் இச்செயற்பாடுகளை பெருமளவில் ஆணாதிக்கச் சூழலில் கலாச்சார, சமூக வழமையாலும் கரும விதிகளாலும், கட்டுப்பாடுகள் மத்தியிலும் செயற்படும் இவர்களின் நிலை சிங்கள இராணுவம் தொடர்ந்தும் இருப்பதால் பாதுகாப்பற்ற ஒரு நிலையில் உள்ளது. முரண்பாடு தொடர்ந்த காலங்கள் பூராவும் பாலியலை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகளையும், துஸ்பிரயோகங்களையும் அனுபவித்து வந்துள்ளனர். அந்நிலை குடும்ப சமூகக் கட்டமைப்புக்கள் சிதைந்து இருக்கையில் தொடர்கின்றது. இவர்களுள் பலர் நிறைவேறா சமூக, பொருளாதாரத் தேவைகளையும் அவர்களை முடக்கக் கூடிய மன உளைச்சல்களையும் அனுபவித்து வருகின்றனர். யுத்தத்தின் பின்விளைவாக நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் மற்றும் ஏனைய பகுதிகளிலும் வாழும் முஸ்லிம் பெண்களும் சிங்களப் பெண்களும் அவர்களுக்கென்றே ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்கினறனர். ஆதலால் நிலைமாறும் தறுவாயிலான நீதிக்கான வழிமுறைகளுள் அவர்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கிக் கொள்வது நல்லதாக இருக்கும்.

அர்த்தமுள்ள வகையிலான நிலை மாறும் தறுவாயில் உள்ள நீதி என்பது பெண்களின் கடும் பொருளாதார ரீதியாகவும், உடல் ரீதியாகவும் எளிதில் பாதிக்கப் படக் கூடிய நிலையைக் தணிக்க கூடியதாக இருத்தல் வேண்டும். விரிவாக்கப்பட்ட வாழ்வாதாரம் அளிப்பதற்கும், ஓய்வூதியம் அளிப்பதற்கும் கடன்களிலிருந்து மீளுவதற்கு சமூக உளவியல் தாங்களிற்கான ஆதரவு முதலியவற்றை வழங்கக் கூடிய வகையிலான நன்கு வடிவமைக்கப்பட்டு ஒருங்கமைக்கப்பட்டதும் பரந்த அளவில் ஆதரவைப் பெறக் கூடிய செயற்திட்டங்கள் அவசியமாகின்றன. இழப்பை ஈடு செய்வதற்கான அரசியல் வலுவுள்ள அலுவலகம் இருத்தல் வேண்டும். அவ் அலுவலகத்திற்கு அரசியல் ரீதியாகவும், அலுவலர்கள் ரீதியாகவும் ஏற்படும் எதிர்ப்புக்களை சமாளிப்பதற்கு ஜனாதிபதியினதும் பிரதம மந்திரியினதும் வலுவுள்ள அரசியல் ஆதரவு தேவைப்படும். அதே போன்று சமூக ரீதியாகவும் மாவட்ட மட்டத்திலும் அமைக்கப்படும் பெண்கள் குழுக்களுக்கு நிதியும், அரசியல் ஆதரவும் வழங்குவது அவசியமாகும்.

காணாமல் போனோர்தொடர்பான அலுவலகத்தை உடனடியாகசெயற்படுத்தி அதன் கிளைகளை வடக்கிலும், கிழக்கிலும் அமைத்துக் கொள்ளத் தேவைப்படும் போதிய வழங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவ் அலுவலகத்தின் ஆளணியினுள் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பெண்கள் உட்பட சுயாதீனமாகவும் குரல் கொடுக்கக்கூடியவர்கள் நம்பகரமான ஆளணியினர் நியமிக்கப்பட வேண்டும். பொறுப்புக் கூறலுக்குத் தேவைப்படும் வழிமுறைகளை அமைத்துக் கொள்ள சர்வதேசப் பங்களிப்பு விரைவில் வரக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆனால் எதிர்காலத்தில் முரண்பாடுகள் ஏற்படக்கூடிய வாய்ப்பை குறைத்துக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் இலங்கையில் உலாவிக் கொண்டிருக்கும் பல ஆவிகளை ஓய்வு பெறச் செய்வதற்கும் அவ்வகையான ஏற்பாடு ஒன்று அவசியம் தேவை.

இலங்கையில் நிலை மாறும் தறுவாயில் உள்ள நீதி வழங்குவதற்கான செயற்பாடுகள் தேக்க நிலையை அடைந்ததற்கு பெரும்பாலான காரணம் அச்செயற்பாடுகளிற்கான பொதுமக்களின் ஆதரவைத் திரட்டிக் கொள்ள அரசு ஒரு பொழுதும் முயற்சி எடுக்காமை ஆகும். அவ்வகையான செயற்பாடுகளினால் எல்லா சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைஅரசாங்கம் விளக்கத் தவறிவிட்டது. இராணுவமோ, அரசியல் எதிரிகளோ அம்முயற்சிகளிற்கு எதிராக செயற்படுவதை வலுவற்றதாக்குவதற்கும் இழப்பீடு செய்தலுக்கான முயற்சிகள் காணாமல் போனவர்கள் தொடர்பிலான அலுவலகத்தின் செயற்பாடுகளும்

யுத்தத்தினால் ஏற்பட்ட பின் விளைவுகளை எதிர்கொள்ள எவ்வாறு உதவக்கூடும் என்பதை பாரிய பிரச்சாரங்கள் மூலம் பொதுமக்களிற்கு விளக்கம் அளிப்பது உதவும்.

வடக்கிலும், கிழக்கிலும் வளர்ந்து கொண்டிருக்கும் நெருக்கடி நிலையினைத் தணிப்பதற்கும் 2015-ம் ஆண்டில் உறுதி அளித்தவாறு அரசியல் ரீதியான மாற்றங்களின் மூலம் எதிர் காலத்தில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் குறிப்பிட்ட தேவைகளை எதிர்கொள்ள அவர்களை நிலை மாறும் தறுவாயிலான நீதி தொடர்பிலான செயற்பாடுகளை வடிவமைத்து அமுல் செய்வதில் பங்கு கொள்ளச் செய்வது கண்டிப்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை ஆகும்.

### பரிந்துரைகள் :-

*ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கவுன்சிலுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற ஒரு விரிவான நிலை மாறும் தறுவாயிலான நீதி வழங்கலிற்கான வழிமுறைகளை அர்ப்பணிப்புடன் நிறைவேற்ற ஆரம்பிப்பதற்கான பரிந்துரைகள்:*

## இலங்கை அரசாங்கத்திற்கு:

1. காணாமல் போன நபர்கள் தொடர்பிலும் இழப்பீட்டை செய்வதற்கும் அமைக்கப்பட உள்ள அலுவலகங்கள் எவ்வகையில் சகல சமூகத்தினருக்கும் உதவும் என்பதனை பொதுமக்களுக்கு விளக்கி அரசியல் எதிரிகள், இராணுவத்தினர் முதலியோர் இவ் அமைப்புகளிற்கு தெரிவிக்கும் எதிர்ப்பை குறைப்பதற்கும் உதவ பாரிய அளவிலான பிரச்சாரம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்.

2. காணாமல் போனவர்கள் தொடர்பிலான அலுவலகம் சுயாதீனமான ஆளணியினரைக் கொண்டதாகவும் வடக்கு, கிழக்கில் கிளை அலுவலகங்களைக் கொண்டதாகவும், அவற்றில் பாதிப்புற்ற குடும்பத்தினருக்கு ஒரு வகிபாகத்தைக் கொண்டதாகவும் உடனடியாக செயற்படக்கூடியதாக்கப் படுதல் வேண்டும்.

3. இழப்பீடுகள் தொடர்பான அலுவலகம் ஒன்றை உருவாக்கி சட்ட வரைபு ஒன்றைத் தயாரிப்பதில் ˙பொதுமக்களின் தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.

அவ்வலுவலகத்தின் அதிகாரப் பத்திரத்தை வடிவமைக்க சிங்களவா்களினதும், தமிழா்களினதும் முஸ்லிம்களினதும் ஆதரவைத் திரட்டி ஆலோசனை வழங்க என நியமிக்கப்பட்ட செயலணியினது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இது தொடா்பான தீா்வுகளையும் பொதுமக்களின் கருத்துக்களையும் கொள்கை வகுப்பாளா் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

4. இழப்பீடு வழங்குதல் தொடா்பான அலுவலகத்தின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து சகல சமூகங்களைச் சேர்ந்த யுத்தத்தால் பாதிப்புற்றோரின் குடும்பத்தினருக்கு பயனளிக்கக் கூடியவாறும் அதனை வடிவமைத்து அதனைச் செயற்படுத்தக்கூடிய அதிகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பெண்களின், குறிப்பாக பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களின பொருளாதாரத் தேவைகளை முறை சார்ந்த வகையில் ஐ.நாவினதும், நன்கொடையாளா்களினதும், மாகாண சபைகளினதும் ஒத்துழைப்புடன் மதிப்பீடு செய்தல் வேண்டும். இவ்வாறு செய்கையில் அதற்கென வகுக்கப்படும் வழிமுறைகளுள் நியாயமான இலகுவாக விளங்கிக்கொள்ளக் கூடிய பாதிப்புற்றோருக்கான ஒரு ஓய்வூதியத் திட்டமும், யுத்தத்தினால் அங்கவீனமுற்ற பெண்களிற்கான மருத்துவ ஆதரவும், முரண்பாட்டினால் பாதிப்புற்ற பிள்ளைகளின் கல்விக்கு நிதி வழங்குதல் அவா்கள் கொள்வனவு செய்யக்கூடிய வகையிலான வீடமைப்பும், விதவைகள், ஒன்றில் அவ்வீட்டை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளவோ காணிகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்ளவோ கூடிய வகையிலான சீா்திருத்தங்களையும் செய்ய வேண்டும்.

6. முரண்பாடுகளால் பாதிப்புற்ற சகல பகுதிகளிலும், சமூக உளவியல் ஆதரவு அளிக்கும் ஒழுங்கு முறைகளை மேம்படுத்த வேண்டும், அவ்வாறு செய்கையில் காணாமல்போனோர் அலுவலகத்துடனும் ஏனைய ஏதேனும் பொறிமுறைகள் உருவாக் கப்படடிருப்பின், அவற்றுடனும் தொடர்பு பட்டு செயற்பட்டு குறிப்பாக பாலியல் வன்முறையாலும் பொதுவாக பால் சார்ந்த வன்முறைகளாலும் பாதிப்புற்றோருக்கு பூரணமான வைத்திய பரிகாரம் பெற்றுக்கொள்ளக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

7. 2009ல் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் பெயர்களின் பட்டியலை வெளியிட்டு ஒரு விசேட பொறுப்புக்கூறலுக்கான நீதிமன்றம் ஒன்றை அமைத்துக் கொள்வதற்கு தேவைப்படும் அரசியல் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும் ஆட்கள் காணாமல் போகச்செய்யப்பட்டமை ஆட்கடத்தல்கள் வேறு சின்னமான (emblematic) போற்குற்றங்களையும் யுத்தத்திற்கு பின்னான அரசியல் குற்றங்கள் தொடரபிலும் நம்பகரமான சுயாதீனமான பொலிஸ் புலனாய்வுகளை சட்டத்தை துச்சமாக மதித்து செயற்படுவதை ஒழிப்பதற்காக ஒரு படியாக நடத்துதல் வேண்டும்.

8. சகல இலங்கையினருக்கும் முன்னைய நாள் இறந்தவர்களை நினைவு கூறும் உரிமை உள்ளது என்பதை ஏற்றுக் கொண்டுஅதற்கான வசதிகள் செயதல் வேண்டும். நிலை மாறும் தறுவாயிலான நீதி வழங்குவதற்கான பொறிமுறைகளில் முரண்பாட்டினால் பாதிப்புற்ற பெண்களின் வலுவான பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான சூழலை ஏற்படுத்தல்.

*நிலை மாறும் தறுவாயிலான நீதி வழங்குவதற்கான பொறிமுறைகளில் முரண்பாட்டினால் பாதிப்புற்ற பெண்களின் வலுவான பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான சூழலை ஏற்படுத்தல்.*

## இலங்கை அரசாங்கத்திற்கு:

9. போரில் உயிர் தப்பியவர்களும் பெண்களும் பிராந்திய மட்டத்திலான செயலணிகளும் காணாமல் போனவர்கள் தொடர்பிலும் அவர்களின் இழப்பை ஈடு செய்வதற்கான அலுவலகங்களின் திட்டங்கள் வகுத்துக் கொள்வதிலும் அவற்றை நடைமுறைப் படுத்துவதிலும் அவர்கள் தொடந்தும் பங்குகொள்வதை உறுதிப்படுத்துதல்.

10. வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பெண்களிற்கெதிராக வன்முறைகளும், பாலியல் சுரண்டல்களும் நடப்பதைத் தவிர்க்கவும் அவற்றிற்கான தண்டனை வழங்குதலும் உட்பட பின் வருவன செய்தல்: பாதிப்புற்றவர்கள் பாலியல் சேமநலம் தொடர்பாகவும் மகப்பேற்று

சேமநலம் தொடர்பான தகவல்களையும் சேவைகளையும் அணுகக் கூடியதாக்குதல், இராணுவத்தினர்களினதும் அரச பணியாளர்களினதும் ஒழுக்க விதிகளை அமுல் செய்தல், பாலியல் ரீதியான வன்முறைக்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்க பயிற்சி பெற்ற அதிக அளவிலான தமிழ் பேசும் பொலிஸ் அலுவலர்களையும் அதிக அளவிலான தமிழ் பேசும் பெண் பொலிசாரையும் பயன்படுத்துதல், பொலிஸ் மற்றும் அரச அலுவலகங்களில் பெண்களுக்கும் சிறுவர்களிற்குமான பணிக் கருமபீடங்களை வலுப்படுத்தல், அத்துடன் உயர் நீதி மன்றத்தில் பாலியல் குற்றங்கள், பாலியல் ரீதியான வன்முறைகள் முதலியன தொடர்பிலான வழக்குகளை விசாரிக்கும் விசேட பிரிவு ஒன்றை நிர்மாணித்தல்.

11. வடக்கிலும், கிழக்கிலும் உள்ள சாதாரண குடி மக்களின் வாழ்வில் இராணுவத்தினால் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்கு பெண்களின் இல்லங்களை இராணுவம் கண்காணிப்பதை, குறிப்பிட்ட ஏதோ ஒரு விசேட காரணத்திற்காக அவர்களின் வதிவிடங்களுக்கு செல்வது உட்பட, நிறுத்துவதற்கும், இராணுவத்திடம் இருக்கும் தனியார் காணிகளை திரும்ப வழங்குவதை துரிதப்படுத்துதலும், இராணுவத்தினால் நடத்தப்படும் விவசாய முயற்சிகளையும் ,கடைகளையும், ஹோட்டல்களையும் முடிவிட அல்லது அவற்றை சாதாரணமக்களின் கட்டடுப்பாட்டிற்கு மாற்றிவிடுதலுக்கான முயற்சிகள் ஆரம்பிக்க லேண்டும்.

## ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச நன்கொடையாளருக்கு: (பரிந்துரைகள்):

12 வடக்கிற்கும், கிழக்கிறகும் அளிக்கப்படும் பொருளாதார ஆதரவை மேம்படுத்தி வலுப்படுத்தலும் அங்குள்ள மக்களின் பாரிய கடன் பழுவின அளவினைக் குறைப்பதற்கான வழிமுறைகளைக் கூட்டாகக் கண்காணிப்பதற்கான நெறிமுறைகளை வகுத்துக் கொள்ளல்.

13 சமூக மாவட்ட மட்டத்திலான பெண்கள் குழுக்கள் பிராந்திய செயலணிகளின் பெண் அங்கத்தவர் உட்பட்டோரை அரசியல் ரீதியாகவும், நிதி ரீதியாகவும் வலுப்படுத்த ஆதரவு கொடுத்தல்.

14. ஐ.நாடுகளின் சமாதானத்தைக் கட்டியெழுப்ப முன்னுரிமை கொடுப்பதற்கான திட்டத்தினை மாற்றம் அடைந்து கொண்டு அதிகரித்த ரீதியில் கடினமாகி வரும் அரசியல் சந்தர்ப்ப சூழ்நிலைகளிற்கும் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்படக் கூடிய புதிய முன்னெடுப்புகள் ஏதேனும் இருப்பின் அதற்கமைய மீளாய்வு செய்யக் கூடியதாக ஆக்குதல்.

டிடிடிடிடிடிடிடிடி